Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 16

செவ்வாய்க்கிழமை
12 டிசெம்பர் 2023

கார்த்திகை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"இப்பிடி கோடரிக்காம்புத்தனமான வேலையளாலதான் எங்கட இனம் இப்பிடி இருக்குது பாருங்கோ"

# பட்ஜெட் மீது நாளை இறுதி வாக்கெடுப்பு!

**கொழும்பு, டிசெம்பர் 12**

**2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நாளை மாலை நடைபெறவுள்ளது.**

15

காரைநகர் கடற்படைக்கு

## தனியார் காணி தாரைவார்ப்பு!

விருப்பப்பட்டுக் கொடுத்தாராம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

காரைநகர் கடற்படைக்கு காணிசுவீகரிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக இன்று போராட்டமொன்று இடம்பெறவிருந்த நிலையில், அந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. காணியின் உரிமையாளர் தானாக முன்வந்து கடற்படைக்குக் காணியைக் கையளித்ததை அடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஜே/41 கிராமஅலுவலர் பிரிவில் உள்ள 0.2024 விஸ்தீரணமுள்ள காணியே இவ்வாறு கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

திஸ்ஸ விகாரைக்கு

## சிங்கள மக்கள் படையெடுப்பு

சிறப்பு ரயில்களில் வந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு நேற்று சுமார் 400 சிங்கள மக்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சிறப்பு ரயிலில் அவர்கள் அழைத்து வரப்பட்டு, திஸ்ஸ விகாரையில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு சிறப்பு உதவித் திட்டங்களும் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, தையிட்டியில் இதுவரை விடுவிக்கப்படாதுள்ள காணிகளையும் அந்த மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

இது, காணிகளை சிங்கள மக்களுக்குத் தாரைவார்க்கும் முயற்சியா? என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-ம-26)

பெண்ணைத் தாக்கி

## நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம், அச்சுவேலி நாவற்காட்டுப் பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணை மோட்டார்சைக்கிள் மற்றும் ஓட்டோவில் சென்ற இனந்தெரியாத நபர்கள் தாக்கிவிட்டு, ஒன்றரைப் பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை

15

## வற் அதிகரிப்பு நிறைவேற்றம்!

கொழும்பு, டிசெ. 12

வற்வரியை அதிகரிப்பது தொடர்பான சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஒதுக்கீட்டுச் (2024) சட்டமூலம் மீதான நேற்றைய தினத்துக்குரிய குழுநிலை அலுவல்கள் நிறைவுற்றதை அடுத்து ஒழுங்குப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய நேற்று மாலை 4.35 மணிக்கு சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 98 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கு அமைய இரண்டாவது மதிப்பீடு 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குழுநிலைத் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. மாலை 4.58 மணியளவில் சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்

15

## அரசமைப்புப் பேரவைக்குள் ஜனாதிபதி தலையிடமுடியாது

சித்தார்த்தனை உள்ளீர்க்குக சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 12

அரசமைப்புப் பேரவையின் நடவடிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. அரசமைப்புப் பேரவைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை உள்வாங்கும் முடிவு உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு

15

ஜனாதிபதி தேர்தலைத் தவிர

## வேறுதேர்தல்கள் சாத்தியமில்லை!

சிறீதரன் எம்.பி. கருத்து



வவுனியா, டிசெ. 12

ஜனாதிபதித் தேர்தலைத் தவிர, இதர தேர்தல்கள் எதுவும் இப்போதைக்கு நடக்கும் சாத்தியம் தென்படவில்லை என்று தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

15

## வடக்குக்கு அருகில் புதிய தாழமுக்கம்?

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடக்கு மாகாணத்துக்கு அருகில், எதிர்வரும் 18ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையில் புதிய தாழமுக்கமொன்று ஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அண்மித்ததாக இந்தத் தாழமுக்கம் ஏற்படலாம். எனினும் அடுத்த ஓரிரு நாள்களில்தான் இந்தத் தாழமுக்கத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் தெரியவரும். அவ்வாறு தாழமுக்கம் உருவானால் வடக்குக்கு கனமழை கிட்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)



## விபத்தில் ஒருவர் இறப்பு!

கிளி., டிசெ. 12

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர். கனகரத்தினம் கோசிகன் (வயது - 33)

15

## மாணவர்களுக்கு மாவா விற்பனை

நபரொருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 12

மாணவர்களை இலக்குவைத்து மாவா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரொருவர் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட மாவா அவரிடம் இருந்து மீட்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைக் கொலை செய்யவே அரசாங்கத்தின் திட்டங்கள்!



கொழும்பு, டிசெ.12

**பெறுமதி சேர் வரி உள்ளிட்டு அனைத்து விடயங்கள் ஊடாகவும் நாட்டு மக்களைக் கொலை செய்வதற்குரிய வேலைத்திட்டங்களே அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி குற்றஞ்சாட்டினார்.**

மக்களைக் கொல்லும் ஒவ்வொரு வேலைத்திட்டத்தின்போதும் நீங்கள் கைகளைத் தட்டி ஆரவாரமிட்டு எங்களுக்குச் சேறு பூசும் நடவடிக்கைகளையே முன்னெடுத்தீர்கள். எவரும் இந்த நாட்டுக்காகப் புதிய முன்மொழிவுகளை முன்வைக்கவில்லை. இந்த நாட்டு மக்களின் உரிமைகள் தொடர்பில் எந்தவொரு நபரும் கருத்துகளை முன்வைக்கவில்லை.

நாட்டு மக்களுக்காகக் கருத்துகளை வெளிப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் சேறுபூசுவதற்கு மாத்திரமே இந்தச் சபையில் உள்ளவர்களுக்கு முதுகெலும்பு இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கதிர்காமத்தின் பூசகர் மாயம்

தொழும்பு, டிசெ.12

கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பிரதான பூசகரும் களஞ்சியத்துக்குப் பொறுப்பாக இருந்த பூசகரும் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களைக் கைதுசெய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ள நிலையிலேயே அவர்கள் காணாமற்போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதாள உலகத் தலைவரான அங்கொட லொக்காவின் மனைவி தனது பிள்ளை நேர்த்திக் கடனுக்காக கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கு காணிக்கையாகச் செலுத்திய 38 பவுண் எடை கொண்ட தங்கத் தட்டு காணாமற்போன சம்பவம் தொடர்பாக இவர்களைக் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (எ-இ)

## மண்மேடு சரிவு! அதிகரித்தது உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.12

காலி, கராபிட்டியவில் கட்டுமானத்தளம் ஒன்றுக்கு அருகே மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றுமொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கராபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரே உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-இ)

## மாணவிகளிடம் அதிகரிக்கும் போதை மாத்திரைப் பாவனை!

அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பாடசாலை மாணவிகள் மத்தியில் போதை மாத்திரைப் பாவனை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி அநுராதபுரத்தில் உள்ள மருந்தகம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் மாணவிகள் மத்தியில் போதை மாத்திரைப் பாவனை அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வாங்குவதற்காக மாணவிகள் முறையற்ற விதத்தில் பணம் ஈட்ட முற்படுகின்றனர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

## மீனவருக்குப் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டது 5 ரூபாவே



கொழும்பு, டிசெ.12

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு மீனவருக்கு ஐந்து ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நான்கு முன்னாள் ஜனாதிபதிகளின் பராமரிப்புக்காக 11 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வற்வரி விதிக்கப்பட்டதன் பின்னர் டீசல் 63 ரூபாவால் அதிகரிக்கப்படும். மீனவர்கள் எவ்வாறு கடலுக்குச் செல்வார்கள்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)

## பெரமுன பதவிகளில் மாற்றம் ஏற்படாதாம்

கொழும்பு, டிசெ.12

சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது மாநாட்டில் கட்சியின் முக்கியமான நிர்வாகப் பதவிகளில் மாற்றம் எதுவும் ஏற்படாது என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியின் நிர்வாகப் பணிகள் உத்தியோகபூர்வ அமைப்பிடம் ஒப்படைக்கப்படும் அதேவேளை, கிராம மட்டத்தில் கட்சியை மீளக்கட்டியெழுப்புவது தொகுதி மட்டத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் தேர்தல் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தத் தேர்தலை எதிர்கொள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

## கல்மடுக்குளத்திலிருந்து உபரி நீர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.12

தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் குளங்களில் ஒன்றான கல்மடுக்குளம் தனது நீர்மட்டமான 26 அடியைத் தாண்டி 27.1 அடி ஆக உயர்ந்துள்ளது.

தற்பொழுது குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றப்படுவதால், அருகில் வசிப்பவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (எ-113)

## விதிகளை இறுக்கும் அவுஸ்திரேலிய அரசு

கொழும்பு, டிசெ.12

சர்வதேச மாணவர்கள் மற்றும் குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்களுக்கான விசாக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குவதற்கு அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையால் அடுத்த ஆண்டு புலம்பெயர்தோரை உள்ளீர்க்கும் அளவும் பாதியாகக் குறையும் என அந்நாட்டு அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டவர் குடியேற்றம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 5 இலட்சத்து 10 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது.

2023 மற்றும் 2024 ஆண்டு காலப்பகுதி மற்றும் 2025 மற்றும் 26ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த எண்ணிக்கையை இரண்டரை லட்சமாகக் குறைப்பதற்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## வடமராட்சியில் உண்ணிக் காய்ச்சல்

*யாழ்ப்பாணம், டிசெ.12*

*வடமராட்சிப் பிரதேசத்தில் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களது எண்ணிக்கை வழமையைவிட அதிகரித்துள்ளது என்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மாதாந்தம் தலா ஒருவர் அல்லது இருவர் உண்ணிக் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மாதத்தின் முதல் ஒருவாரத்தில் மட்டும் உண்ணிக் காய்ச்சல் பாதிப்புடன் மூவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகள் மற்றும் கால்நடைகளில் உள்ள உண்ணிகள் மூலம் ஏற்படும் உண்ணிக் காய்ச்சல் மழைக் காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதால் மக்கள் அவதானமாகச்செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ-100)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் விகிதாசாரத்தை குறைக்கும் அதிகாரசபை!

**கொழும்பு, டிசெ.12**

**கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைத்ததுபோல் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் தமிழர்களின் இனப்பரம்பலைக் குறைப்பதற்கான முயற்சியில் மகாவலி அதிகாரசபை தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மகாவலி அதிகாரசபை 1988 ஆம் ஆண்டு எல் வலயமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, இன்று 35 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன.

இந்த 35 வருடங்களில் மகாவலி 'எல்' வலயம் ஊடாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தமிழர்களின் பூர்விக நிலங்கள் பறிக்கப்பட்டு, தென்பகுதி மக்களுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

மகாவலி அதிகாரசபையென்பது ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை குறைத்துள்ளது. தற்போது வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்க தொடர்ச்சியாக செயற்பட்டுவருகின்றது” - என்றார். (எ-44)

## உர மோசடி தொடர்பாக ஏன் நடவடிக்கை இல்லை?

### கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி

கொழும்பு, டிசெ.12

உர மோசடி தொடர்பில் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காலத்தில் எடுக்கப்பட்ட முடிவால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புப் பெரியது.

கணக்காய்வாளர் நாயக திணைக்களம் மேற்கொண்ட கணக்காய்வு அறிக்கை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பில் இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதைப் போன்றே அரசாங்கத்தில் நிலவும் ஊழல் மோசடிகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை” என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## அநுராதபுரம் மருத்துவமனையில் தீப்பரவல்

கொழும்பு, டிசெ.12

அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்குச் சொந்தமான மெத்சிறிசெவன கட்டட வளாகத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அநுராதபுரம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு முன்னெடுத்தது.

இந்த நிலையில், தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## செயற்கை நுண்ணறிவு திட்டத்துக்கு அதிக நிதி



கொழும்பு, டிசெ.12

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை இலங்கையில் அறிமுகம் செய்யவும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் வரலாற்றில் ஒதுக்கப்பட்ட கூடுதல் தொகை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

“ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதில் விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் துறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் . நாட்டில் டிஜிற்றல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது” என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## திறைசேரி உண்டியல் ஏல விற்பனை

கொழும்பு, டிசெ.12

2 இலட்சத்து 20 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 75 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 75 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

## பொலிஸார் தொடர்ந்து கடமையில்

**கொழும்பு, டிசெ.12**

**மிஹிந்தலை விகாரையில் இருந்து இராணுவத்தினர் திரும்பப் பெறப்பட்டுள்ளபோதும், பொலிஸார் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**விகாரையில் இருந்து பொலிஸார் அகற்றப்பட்டனர் என்று வெளியான செய்திகளைப் பொலிஸார் மறுத்துள்ளனர். (எ-இ)**

## தினம் தெரியுமோ?

**என்னதான் ஆயிரம் புத்திமதி சொன்னாலும் 'கெடுகிறன் பார் பந்தயம் பிடி' எண்டு சிலர் பிடிவாதமா இருப்பினம். இஞ்ச என்னடா வெண்டால் 'யாழ்ப்பாணத்தைக் கெடுக்கிறன் பார் பந்தயம் பிடி' எண்டு சிலர் கிளம்பியிருக்கினம். கிட்டடியில ஒரு விடுதியில இரவிரவா ஆம்பிளையளும் பொம்பிளையளுமாச் சேர்ந்து, குடி, கும்மாளம் எண்டு ஒரு பார்ட்டி நடந்து பெரும் பிரச்சினையானது. அதுக்குப் பிறகும் அந்த விடுதியில இன்னொரு தண்ணிப்பார்ட்டிக்கு பெர்மிசன் கேட்டு முனிசிபலுக்கு கடிதம் எழுதினவை. ஆனால் யாழ்ப்பாணம் முனிசிபல்காரர் 'இப்பிடியான கலாசாரச் சீரழிவான விசயங்களுக்கு இனிமேல் அனுமதி தரமாட்டம்' எண்டு வெட்டு ஒண்டு துண்டு ரண்டாச் சொல்லிப்போட்டினம்.**

**ஆனால் 'இது ஒவ்வொரு வருசக் கடைசியிலையும் செய்யிற பார்ட்டிதான். அதால பயப்பிடத் தேவையில்லை' எண்டும் சொல்லிப் பார்த்திருக்கினம். அதுக்கும் முனிசிபல் சம்மதிக்கேலை. பிறகு 'சரி, தண்ணிப்பார்ட்டி வைக்காமல் வெறும் சாப்பாட்டோட முடிக்கிறம். அதுக்கு அனுமதி தேவையில்லைத்தானே' எண்டு சொல்லி அந்த விடுதிக்காரர் முதல் சொன்ன திகதியில, ஆக்களை வரச் சொல்லி இருக்கினம். ஒராளுக்கு மூவாயிரம் ரூபாயாம். பகிடி என்னெண்டால் இந்தப் பார்ட்டிக்கு அநுராதபுரத்தில இருந்தெல்லாம் ஆக்கள் வந்தவையாம். பாவம், அவைக்கு அங்க நல்ல சாப்பாடு இல்லைப் போல, அதால இஞ்ச மூவாயிரம் குடுத்து நல்ல சாப்பாடு சாப்பிடுவம் எண்டு 5 மணித்தியாலம் பயணம் செய்து வந்திருக்கினம். இப்பிடி எல்லாப் பக்கத்தில இருந்தும் ஆம்பிளையள், பொம்பிளையள் எண்டு எக்கச்சக்கம் பேர் வந்திருக்கினம். சாப்பாட்டோட தொடங்கின் பார்ட்டி போகப்போக தண்ணிப் பார்ட்டியா மாறிட்டுது.**

**தண்ணி உள்ளுக்க போனால் கால் தள்ளாடும் தானே. அதால எல்லாரும் பாட்டைப் போட்டிட்டு ஆடுறம் எண்ட பேரில தள்ளாடத் தொடங்கிட்டினம். இடையில அதில ஏதோ பிரச்சினை வந்திட்டு. ரண்டு கோஷ்டியா மாறி அடிபடவும் தொடங்கிட்டினமாம். பிறகு ஒருமாதிரி அடிபட்டவங்களைச் சமாதானப்படுத்தி பார்ட்டியை முடிச்சவையாம். முனிசிபல் அனுமதி குடுக்காட்டியும் இந்தப் பார்ட்டியை வைச்ச அந்த விடுதியின்ர சமூகநலப் பார்வையை பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த விடுதி ஒவ்வொரு வருசக் கடைசியில செய்யிற இந்தப் பார்ட்டியை வைக்காட்டி அது தெய்வக் குற்றமாப் போயிருக்கும். பிறகு காலம் புது வருசம் பிறக்காமல் யாழ்ப்பாணத்தார் எல்லாரும் 2023ஆம் ஆண்டிலையே முழுக்க இருக்க வேண்டி வந்திருக்கும். இப்பிடிப்பட்ட ஆபத்தை இல்லாமல் செய்யத்தான் அந்த விடுதிக்காரர் இப்பிடி 'ரிஸ்க்' எடுத்து பார்ட்டி வைச்சவை எண்டது எங்கட சனத்துக்கு விளங்கப் போறதில்லைப் பாருங்கோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் பொலிஸாருக்கு பதவி உயர்வில் அநீதி!

## நாடாளுமன்றக் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.12

பதவி உயர்வு பெறுவதில் பெண் பொலிஸ் அதிகாரிகள், அநீதிக்கு ஆளாகியுள்ளனர் என்று நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

ஆயினும் ஆள்சேர்ப்பு, பயிற்சி, பணியமர்த்தல் மற்றும் ஓய்வு பெறுதல் போன்ற அனைத்து அம்சங்களும் ஆண் பொலிஸ் அதிகாரிகளுக்குச் சமமாகப் பெண் பொலிஸ் அதிகாரிகள் பார்க்கப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்கான பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கையிடும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயின் தலைமையில் கூடியது.

பெண் அதிகாரிகளின் பதவி உயர்வுகளில் கவனம் செலுத்தப்படுவதில்லை என்று நாடாளுமன்றக் குழு குறிப்பிட்டுள்ளது.

அநீதி நிலைமையைத் தவிர்க்க, இலங்கைப் பொலிஸ் துறையில் 15 வீதத்துக்கும் அதிகமான பெண் அதிகாரிகள் இருப்பதால், அனைத்து பதவிகளிலும் 15 வீதப் பெண் பிரதிநிதித்துவத்துக்கான வெற்றிடங்களை உருவாக்க நாடாளுமன்றக் குழு முன்மொழிந்துள்ளது. (எ-44)



வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் சாரணியர்கள், ஜனாதிபதி விருதுக்கான நடைபயணத்தை நேற்றுமுன்தினம் முன்னெடுத்தனர். 22 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இந்த நடைபயணம் அமைந்தது. (ம-27)



இலங்கை சமாதான நீதிவானாக திருமதி தமயந்தி கிறிஸ்தோப்பர் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.எஸ்.பண்டார மன்கசிங்க முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ம-60)



உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சிறு வியாபாரிகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் ஊடாகப் பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சன்குளம், திருநகர் மற்றும் யோகபுரம் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், சிறு விவசாயிகளுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டன. மல்லாவி திருநகரில் சமுர்த்தி பல்பொருள் அங்காடி ஒன்றும் திறக்கப்பட்டது. (எ-இ)

## கட்டுநாயக்கவில் புதிய நடைமுறை

கொழும்பு, டிசெ.12

கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து வெளியேறும் பயணிகளின் பயணப் பொதிகளை இலகுவாக அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சில விமானப்பயணிகள் தங்களது பயணப்பொதிகளுக்கு மாறாக வேறு நபர்களின் பயணப்பொதிகளை எடுத்துச் செல்வதும் சில பயணிகள் தெரிந்தே மற்றவர்களது பயணப்பொதிகளைத் திருடிச் செல்வதும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. அதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

கொழும்பு, டிசெ.12

மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த மாதம் முதல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தீர்மானித்துள்ளார்.

எலும்பு, தசை, நரம்புப் பிரச்சினைகள் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு வாகனம் செலுத்த முடியுமானால் பரிந்துரையின் பேரில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.12

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தப் பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 36 (இயற்பகை நாயனார்) யாழ்ப்பாணம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் "சிவனடியார் விரும்பிய பொருளை இல்லை என்னாது கொடுக்கும் நாயனார்"என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பதற்றம் அதிகரிக்கும்.

**இடபம்:** உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**மிதுனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. பிரபலங்கள் அறிமுகமாவார்கள். லாபம் ஈட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய சிந்தனைகள் மனதில்தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். நீண்டநாள்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பணப்பற்றாக்குறை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்:** கடந்த இரண்டு நாள்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். சோர்வு நீங்கி, துடிப்புடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத இடத்தில் இருந்து பணம் வரும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**விருச்சிகம் :** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகம் வந்து நீங்கும்.

**தனுசு:** எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். எதிர்மறை எண்ணங்கள் வந்துசெல்லும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மகரம்:** அதிரடியான சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். பழைய கடனில் ஒருபகுதியை கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்:** கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். நீண்ட நாளாக தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். உறவினர்களின் ஆதரவு பெறுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோபம் என்பது பொதுமொழி!

இலங்கையில் தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ்வதை எமது அரசாங்கம் உறுதிசெய்யும். ஆனால், காஸாவுக்கு எதிராக ஆயுதங்களை வழங்கும் நாடுகள் எமக்கு மனித உரிமைகள் தொடர்பில் கற்பிக்கத் தேவையில்லை என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சரான அலி சப்ரி. உரிமைகளுக்காக அமைதியாகப் போராடுவதில் தவறில்லை என்றும் அவர் தன் உரையில் கோடி காட்டியிருக்கின்றார். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. ஆதலால், விவாதப் புள்ளிகளும், தர்க்கங்களும் அவருக்குப் புதிதல்ல. ஆனால், அவர் புத்திசாலியாக இருக்கின்றார் என்பதற்காக ஏனையோர் முட்டாள்கள் என்றும் பொருளல்ல.

வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில், காஸா நிலைவரம் தொடர்பான தெளிதல் அலி சப்ரிக்கு இருக்கவே செய்யும். காஸாவுக்கு எதிராக ஆயுதங்களை வழங்கும் நாடுகளின் செயல் கலப்பற்ற கபடத்தனம்தான். இதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆனால், இன்று இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையைக் கண்டிக்காத நாடுகள் என்று ஒன்றுமேயில்லை. இஸ்ரேலை தன் முதலாவது செல்லப்பிள்ளையாகக் கொண்டிருக்கும் அமெரிக்கா கூட விரும்பியோ விரும்பாமலோ காஸாவில், இஸ்ரேல் புரியும் அத்துமீறல்களைக் கண்டித்துள்ளது. இஸ்ரேலின் தாக்குதல் போர்க்குற்றம் என்று சொல்லியிருக்கிறார் ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரஸ். குட்டரஸின் இந்தக் கருத்துக்காக அவர் பதவிவிலகவேண்டும் என்று இஸ்ரேல் கடந்த மூன்று வாரங்களாகப் போர்க்கொடி தூக்கியுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கையில், காஸாவுக்கு எதிராக உலகமே ஒன்றுதிரண்டு தாக்குதல் நடத்துவதைப்போன்றும் - உலகத்தின் நீதித் தராசுகள் இந்த விடயத்தில் தாழ்ந்தே இருப்பது போன்றதுமான தோற்றப்பாட்டை அலி சப்ரி உருவாக்க எத்தனிப்பது பெரும் அபத்தம். இஸ்ரேல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் செயலர் அன்ரனியோ குட்டரஸ் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள் சரியானவை என்றால், அவரை ஒருநீதிமானாகக் கொண்டு - இலங்கை தொடர்பிலும் குட்டரஸ் வெளிப்படுத்திய கருத்துகளை, 'உள்ளது உள்ளபடியாக' ஏற்றுக்கொள்ள, செயற்படுத்த அலி சப்ரி தயாரா? என்ற கேள்வி எழுவது இங்கே தவிர்க்க முடியாததாகின்றது. வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் இந்தக் கேள்விக்குப் பதில் வழங்கவேண்டிய பாத்திரவாளியும் அலி சப்ரியே.

தமிழர்கள் தம் உரிமைக்காக அமைதியாகப் போராடவேண்டும் என்ற தொனிப்படக் கருத்துப் பகிர்ந்துள்ள இதே அலி சப்ரிதான், கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கம், கொரோனாவால் இறந்த முஸ்லிம்களின் ஜனஸாக்களை, முஸ்லிம்களின் இறை நம்பிக்கைக்கு எதிராக எரியூட்டியபோது கிளர்ந்தெழுந்தார். 'முஸ்லிம் இளைஞர்களின் பொறுமையைச் சோதித்து அவர்களை அடிப்படைவாதக் குழுக்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் தள்ளக்கூடிய செயல்' என்று அவர் ஜனஸா எரிப்புக்கு தன் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இத்தனைக்கும் அதே கோத்தாபய அரசாங்கத்தில் அவர் நீதி அமைச்சராக இருந்தார். ஜனஸாவை எரித்தமை தவறுதான். முஸ்லிம்களுக்காக பல்லாயிரம் தமிழர்கள் அன்று களத்தில் குதித்தனர். ஆனால், இங்கே அலி சப்ரி சிந்திக்க வேண்டிய விடயம் என்னவெனில், ஜனஸாக்களை எரிக்கும் செயல் முஸ்லிம் இளைஞர்களின் பொறுமையைச் சோதித்து அவர்களை ஆயுதம் ஏந்தவோ அல்லது அடிப்படைவாதக் கொள்கைக்குள் கொண்டு செல்லவோ வைக்குமென்றால், இத்தனை அடக்குமுறைகளையும் எதிர்கொண்ட - எதிர்கொள்ளும் தமிழர்களின் மனோநிலை என்னவாக இருக்கும்? இந்தக் குறைந்தபட்சப் புரிதலுக்கும் கொழும்பின் அதிகாரக் கதிரைகளுக்கும்தான் கிஞ்சித்தும் தொடர்பில்லையே.




# இந்தியாவின் பாதுகாப்பே இலங்கைக்கும் பாதுகாப்பு

## கோபால் பாக்லே சுட்டிக்காட்டு



**கொழும்பு, டிசெ.12**

**இந்தியா பாதுகாப்பாக இருந்தால் இலங்கையும் பாதுகாப்பாக இருக்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

இலங்கை எதிர்கொண்ட முன்னொரு போதும் இல்லாத நெருக்கடியின் போது வேகமாக வலுவான விதத்தில் செயற்பட்டபோது இந்தியா, வேறு எந்த நாட்டுக்கும் அவ்வாறு உதவவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா - இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் தனது பங்களிப்பை வழங்கியது எனக் குறிப்பிட்டுள்ள அவர் இந்தியாவின் தலைமைத்துவம் வலுவான இந்திய - இலங்கை உறவுகள் தொடர்பாகத் தெளிவாகவும் அர்ப்பணிப்புடனும் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் காணப்பட்டால் அமைதியும் வளமும் காணப்படும் எனத் தெரிவித்துள்ள அவர், எங்கள் நாடுகள் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்வது எங்களின் கூட்டுப் பொறுப்பாகும். இந்த அர்த்தத்தில் இலங்கையினதும் இந்தியாவினதும் பாதுகாப்புப் பிரிக்க முடியாதது பரஸ்பரம் ஒன்றிணைந்தது என்றும் கூறியுள்ளார். (எ-இ)

# கொழும்புத் தமிழர்களிடம் மீண்டும் பொலிஸ் பதிவு!

கொழும்பு, டிசெ.12

கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களை இலக்கு வைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, மோதரை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு பொலிஸ் பதிவு மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் அனைத்தும் சிங்களமொழியில் மாத்திரம் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# மீண்டும் மக்கள் சந்திப்பு

கொழும்பு, டிசெ.12

கொரோனாத் தொற்றுக் காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் - மக்கள் சந்திப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மக்கள் சந்திப்பு மீண்டும் ஆரம்பமாகும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலுக்கு அமைய மக்கள் சந்திப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கல்முனைக்கு அருகில் நிலநடுக்கம்

கொழும்பு, டிசெ.12

அம்பாறை மாவட்டம், கல்முனைக்கு அருகில் நேற்று அதிகாலை 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று இந்திய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 3:41 மணியளவில் கல்முனையில் இருந்து 51 கிலோ மீற்றர் தொலைவில், கடலுக்கு அடியில் 366.2 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (எ-இ)

## நாளை

13.12.2023

**புதன்கிழமை**

**கார்த்திகை - 27**

சுபநேரம் : 04.50 - 06.20

ராகுகாலம் : 12.20 - 01.50

## நாளொரு நல்வார்த்தை

**தபால்தலை போல இருங்கள். நீங்கள் ஒன்றை அடையும் வரை, ஒரு விஷயத்தில் ஒட்டிக்கொள்ளுங்கள்.**

**— ஜோஷ் பில்லிங்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பதிவு நிறுத்தப்படாது

## டிரான் அலஸ் திட்டவட்டம்



கொழும்பு, டிசெ.12

**நாட்டில் போர் முடிவடைந்திருந்தாலும் குற்றச்செயல்கள் குறையவில்லை. பொலிஸ் பதிவை நிறுத்தமுடியாது. அது மக்கள் பாதுகாப்பு நடவடிக்கையாகும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் மனோ கணேசன் தெரிவித்த விடயத் துக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

மனோ கணேசன் முன்வைத்த முதல் விடயம் அப்பட்டமான பொய்யாகும். தமிழ் வீடுகளில் மட்டுமல்ல அனைத்து இன மக் களும் வாழும் வீடுகளிலும் தகவல்கள் கோரப்படுகின்றன. கடந்த முறையும் இந்தப்பிரச் சினை வந்தபோது உறுப்பி னரை அழைத்துப் பேச்சு நடத் தினேன். 90 வீதம் பதிவு முடிந் துவிட்டது. தமிழ், சிங்களம் மற் றும் முஸ்லிம் என மூவின மக் களும் பதிவு செய்யப்பட்டுள்ள னர். இன்று - நேற்று அல்ல பல வருடங்களாக இந்தப் பதிவு நடவடிக்கை இடம்பெறுகின்றது. நான் அமைச்சுப் பதவிக்கு வந்த பின்னர் முன்னெடுக்கும் நடவடிக்கை அல்ல இது.

வெளிப்பகுதிகளில் குற்றச்செயல் களில் ஈடுபட்டுவிட்டு கொழும் பில் தலைமறைவாகி யுள்ளோரை கண்டறிதல் உள் ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைக் காகவே இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நடவடிக்கையில் தவறு கிடையாது. அது நிறுத்தப்படவும் மாட்டாது. விண்ணப்பத்தில் மதம் குறித்து கேட்கப்படவில்லை, இனம் மட்டுமே கேட்கப்பட்டுள் ளது. தமிழ்மொழியில் விண் ணப்பம் வழங்கப்படவில்லை யெனில் அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் - என்றார். (எ-44)

# 80,000 டெங்குத் தொற்றாளர்

கொழும்பு, டிசெ.12

இந்த ஆண்டின் இதுவரை யான காலப்பகுதியில் பதிவான டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தை கடந்துள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள் ளது.

கொழும்பு மாவட்டத்தில் அதிக ளவான டெங்குத் தொற்றாளர் கள் இனங்காணப்பட்டுள்ள னர்.

அதேவேளை, இந்த வருடத் தில் இதுவரை டெங்குத் தொற் றால் 47 பேர் உயிரிழந்துள்ள னர். (எ-இ)

# ஊழல் தொடர்பில் 3,000 முறைப்பாடு!

கொழும்பு, டிசெ.12

இந்த வருடம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்துக்கும் அதிக மான இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் கிடைத் துள்ளனஎன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதி வரை 3 ஆயி ரத்து 255 முறைப்பாடு கள் கிடைத்துள்ளன என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றுள் கணிசமான எண்ணிக்கையானது அரச ஊழியர் கட்ட மைப்பின் செயற்பாடு களின் அடிப்படையில் பெறப்பட்ட முறைப் பாடுகளாகும்.

பொலிஸ் உத்தியோ கத்தர்களுக்கு எதிராக கிட்டத்தட்ட 100 முறைப் பாடுகளும், அதிபர்க ளுக்கு எதிராக கிட்டத் தட்ட 50 முறைப்பாடு களும் கிடைத்துள்ளன என்று கூறப்படுகின் றது.

அதேவேளை, இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவில் ஆளணிப் பற்றாக் குறை காணப்படுகின் றது என்றும் தெரிவிக் கப்படுகின்றது. (எ-இ)

# ரணிலோடு இணையும் திட்டம் எதுவும் இல்லை

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.12

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் ஒருபோதும் இணைந்து செயற்படப்போவ தில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரணிலும், சஜித்தும் இணை வார்கள் என அரசிடம் பணம் வாங்கிக்கொண்டு ஊடகங்கள் எனக் கூறிக்கொள்ளும் சில சேறு பூசும் தரப்புகள் பிரசாரம் முன்னெடுத்து வருகின்றன. ரணிலும், சஜித்தும் ஒருபோதும் இணையமாட்டார்கள். இதனை பொறுப்புடன் இந்த நாடாளு மன்றத்தில் கூறுகின்றேன். போலிப் பிரசாரம் நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

# முறைகேடான வகையில் வற்வரி அறவிடத் திட்டம்



கொழும்பு, டிசெ.12

முறைகேடான வகையில் பெறுமதிசேர் வரியை நடைமுறைப்படுத்த அர சாங்கம் எடுத்த முயற் சியைத் தோற்கடித்துள் ளோம். வற் வரிக்குள் புதி தாக இணைக்கப்படும் 97 பொருள்கள் மற்றும் சேவைகள் தொடர் பான பட்டியலை அரசாங்கம் சபைக்குச் சமர்ப்பிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

அரச வங்கிகளிமிருந்து பல கோடி ரூபா கடன் பெற்று, கடனைச் செலுத்தாத 150 பேருக்கு எதிராக எவ்வித நடவடிக்கை களும் எடுக்காத நிலையில் மனித உடல் களை அடக்கம் செய்வதற்கு வரி அறவிடு தல் எந்தளவுக்கு நியாயமானது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)

# தேசிய மின் கட்டமைப்பில் மீண்டும் நுரைச்சோலை

கொழும்பு, டிசெ.12

செயலிழந்திருந்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி நேற்று முதல் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்று இலங்கைமின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன் றாவது மின்பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகள் கடந்த 7ஆம் திகதி நிறைவடைந்த போதிலும், அது உடனடியாக தேசியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை முன்னர் அறிவித்திருந்தது.

நீர் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதன் கார ணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, மூன்றாவது மின் பிறப்பாக்கி தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

பணிப்புறக்கணிப்பால்

# மக்கள் பெரும் சிரமம்!

கொழும்பு, டிசெ.12

தபால் ஊழியர்கள் முன்னெ டுத்துள்ள 48 மணிநேர அடை யாள வேலை நிறுத்தப் போராட் டத்தால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள் ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிமுதல் 48 மணித்தியால அடையாள வேலை நிறுத்தத் தில் ஈடுபடுவதற்கு தபால் ஊழி யர்கள் தீர்மானித்துள்ளனர் என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரி வித்திருந்தது.

இந்தப் பணிப்புறக்கணிப்பில் 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் ஊழியர்கள் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# அரசமைப்புப் பேரவையில் அரசாங்கம் தலையிடாது

## விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

அரசமைப்புப் பேரவையில் தலையிடுவதற்கான எந்தவொரு தேவைப் பாடும் அரசாங்கத்துக்குக் கிடையாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது-

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றும்போது உள் ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசமைப்புப் பேரவை, முழுமை யாக சுயாதீன நிறுவனமாகும். எவரும் தலையிடமுடியாது. அதில் தலையிடுவதற்கான தேவைப்பாடும் எமக்கு இல்லை. எனினும் அரச மைப்புப் பேரவை உருவாக்கப்பட்டதன்மூலம் அடைய எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான யோசனை மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-44)

# ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெல்வேன்!

## ஜனக ரத்நாயக்க நம்பிக்கை

கொழும்பு, டிசெ.12

ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன் னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நாடாளுமன்ற வாக்களிப்பின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனக ரத்நாயக்க ஜனா திபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதை உறுதி செய் துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மின்துண்டிப்பின் பின்னர் செய் தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக வெற்றிபெறு வேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குற்றங்கள்

## திருட்டு ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.12

கஹாதொடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹாதொடுவ, மொரகஹாஹேன பிரதேசங்களில் வீடுகள் மற்றும் கடைகளை உடைத்துத் திருடிய சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.12

சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பளைப் பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவராவார். டுபாயிலிருந்து நேற்று அதிகாலை இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். (எ-இ)

## மின்தடையை பயன்படுத்தித் திருட்டு

கொழும்பு, டிசெ.12

கடந்த சனிக்கிழமை மின்சாரம் தடைப்பட்டதைப் பயன்படுத்தி பாடசாலையின் பாதுகாப்புக் கமராக்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, குரவில் கிராமத்தில் உள்ள குரவில் தமிழ் வித்தியாலயத்தில் நடந்துள்ளது.

பாடசாலையில் இருந்த 7 பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், அவை திருடப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-19)

## மாணவருக்கு போதைப் பொருள் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.12

பாடசாலை மாணவர்களுக்குப் போதைப் பொருள் விற்ற குற்றச்சாட்டில், 33 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-26-20)

# தமிழக மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் அவசியம்

## வலியுறுத்துகின்றது வலி.வடக்கு சமாசம்

யாழ்ப்பாணம், டிசெ.12

**பருத்தித்துறைக் கடலில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உரிய சட்ட நடவடிக்கைக்குட்படுத்த வேண்டும் என வலி. வடக்கு சமாசத்தின் உப தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட தொழிலாளர் கிராமிய சங்கத்தின் பொருளாளருமான செல்வராசா மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களால் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் நீண்ட காலமாக பல பாதிப்புகளை அனுபவித்து வருகின்றனர்.

எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தொடர்ந்தும் கைது செய்யவேண்டும். கடந்த காலங்களில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். தற்போதும் அவ்வாறு அழுத்தங்கள் வழங்கப்பட்டாலும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் - என்றார். (எ-27)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலனசபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் ச.முகுந்தனும், "தாயிற்சிறந்த தயவான தத்துவனே" என்னும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-இ)

## பரிசளிப்புவிழா

யாழ்., டிசெ.12

மாதகல் நுணசை வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் பொன்னம்பலம் ஆறுமுகரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நடனத்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி ஸ்ரீ. கண்ணதாசன் பிரதம விருந்தினராகவும், நுணசை முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தா பா.புருசோத்தமன், பாடசாலையின் பழைய மாணவர் வே.பூ.அன்பழகன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-66)

## மட்டுவில் அம்மன் திருவிழா இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.12

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்றுத் தற்போது திருப்பணி வேலைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடத்துக்கான வருடாந்த மஹோற்சவம் நடைபெறமாட்டாது. மஹோற்சவ காலமான எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை வரை பூசை, அபிஷேகம் மாத்திரம் இடம்பெறும். காலை அபிஷேகம் காலை 9.30 மணிக்கும், மாலை அபிஷேகம் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகும் என்று ஆலயத் தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (எ-66-9)

## வங்கிக் கணக்கிலிருந்து 80ஆயிரம்ரூபாமாயம்!

கிளிநொச்சி, டிசெ.12

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் திருடப்பட்டுள்ளது என்று வங்கியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனியார் வங்கி ஒன்றின் வாடிக்கையாளரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். நீண்ட காலமாக வைப்பிலிடப்பட்டிருந்த நிலையில், அவரது வங்கிக் கணக்கு பராமரிப்புச் செய்யாத நிலையில் இருந்துள்ளது.

வங்கி அட்டையும் பயன்படுத்தப்படாத நிலையில், கடந்த ஜனவரி மாதம் வைப்பில் இருந்த 80 ஆயிரம் ரூபா பணத்தின் மூலம் இணையம் ஊடாகப் பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று வாடிக்கையாளருக்கு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் வங்கியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார். (எ-19)

## சமூக மட்ட அமைப்புகள் கவனவீர்ப்புப் போராட்டம்

உலக மனித உரிமைகள் தினைத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சமூகமட்ட அமைப்புகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் காலை வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன் நீக்குதல், கொக்குளாய் மனிதப் புதைகுழிக்கு நீதியான - விரைவான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரி பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு, சிமெந்துத் தொழிற்சாலை அமைப்பையும் உடன் நிறுத்துதல், மன்னார்த்தீவில் கனிய மண் அகழ்வை உடன் நிறுத்துதல், மன்னார்த்தீவில் காற்றாலை மின்சாரத்தை அமைக்காது அதை வேறுபகுதிக்கு மாற்றுதல் ஆகிய 8 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்தின நிகழ்வு

தெல்லிப்பழை பிரதேசசபையும் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனமும் ஒன்றிணைந்து நடத்திய சர்வதேச மண்தினம் தெல்லிப்பழை பிரதேச தவிசாளர் சுதர்சன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.


பாலர் பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். பாலர் பாடசாலை பிள்ளைகள் மற்றும் மாவிட்டபுர கிராம மக்களுக்கும் சுகாதார சூழல் பாதுகாப்புக்கான உள்ளூர் உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் மண்வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் மரநடுகையும் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன பிரதம விருந்தினராகவும், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஜகு, உள்ளூராட்சி மாகாண செயலாளர் பிரணவநாதன் தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலரும் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் கியூடெக்-கரித்தாஸ் பிரதிநிதிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ரி-20)

## உபகரணம் கையளிப்பு

சாவகச்சேரி, டிசெ.12

அமரர் சி.கலாநிதியின் 10 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை அவரது குடும்பத்தினரால் மீசாலை சுடர் ஒளி முன்பள்ளியைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 11 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இலங்கை வங்கியில் வைப்புச் செய்து வங்கி புத்தகங்கள் வழங்கப்பட்டன.

35 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ரி-9)



## அன் கபிட்டட் திட்டம்

கரைத்துரைப்பற்று, புதுக்குடியிருப்பு மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள வலிமை குறைந்த சமூகங்களின் மத்தியில் கால நிலை மாற்றம் மற்றும் காலநிலை மாறுபாட்டுக்கான மீள்தன்மையை உருவாக்கும் 'அன் கபிட்டட்' திட்ட நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தத் திட்டம் 2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இரண்டு வருடங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக முக்கியமான தேவைகளாகக் கருத்தப்படும் சிறியளவிலான உட்கட்டமைப்பு வசதிகள், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுடன் தொடர்புபட்ட உப்புநீர் உட்புகு தலைத் தடுக்கும் அணைகள், குளங்கள் புனரமைப்பு, விவசாயிகள் மற்றும் மீனவ சமுதாயத்தின் வருமான அதிகரிப்புக்கு ஏற்ற வாழ்வாதாரத்துக்கான பயிற்சிகள் உபகரணங்களை வழங்குதல் உட்பட பல விடயங்கள் இந்தத்திட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. (ரி-75)



## பந்தக்கால் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.12

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் கும்பாபிஷேக பெருவிழாவுக்கான யந்திர பூஜை ஆரம்பமும், பந்தற்கால் நடும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆலயத்தில் 48 நாள்கள் மண்டலாபிஷேக கிரியைகள் இடம்பெற்று, எதிர்வரும் 22 தொடக்கம் 23ஆம் திகதி வரை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் தைத்திரு நாளுக்கான சமய நிகழ்வும் இடம்பெற்று 24ஆம் திகதி மஹாகும்பாபிஷேக பெருவிழா இடம்பெறவுள்ளது. (ரி-27)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ.12

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் ஒளிவிழா அதிபர் சி.சிவகுமார் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை இராஜசிங்கம் அடிகளார், அருட்சகோதரி மேரிதேவநேசம், ஆசிரியை திருமதி ஜசிந்தா பீலிக்ஸ் மோகன்குமார் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ரி)



## அலங்காரப் பயிற்சி

மணப்பெண் அலங்கார குழுப் பயிற்சி நிகழ்வு இணுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தரால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் திருமதி தூச்சகா அன்ரூட் வளவாளராகக் கலந்துகொண்டு பயிற்சியை வழங்கினார். (ரி-66)

## மாணவர்களுக்கு புத்தகங்கள்



யாழ்ப்பாணம், டிசெ.12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தென்மராட்சி மாணவர் ஒன்றியமும் இணைந்து தென்மராட்சி பிரதேசத்திலுள்ள மாணவர்களின் வாசிப்பு திறனையும், கற்றல் திறனையும் மேம்படுத்தும் பொருட்டு "தெரியாதவர்கள் கற்றுக் கொள்ளுங்கள் தெரிந்தவர்கள் கற்றுக் கொடுங்கள்" எனும் தொனிப் பொருளில் பெறுமதியான புத்தகங்கள் பாடசாலைகளுக்கும், பொது நூலகங்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாசிரியர் மற்றும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் குணரட்னம் ராஜ்குமார் (றமணா)

திதி: சதுர்த்தசி 12.12.2023





அன்னை மடியில் **01.09.1981** — ஆண்டவன் அடியில் **06.12.2022**

### றமணா உன்னைத்தேடி தேடியே ஆண்டொன்று ஆனதுடா!

கண்களில் நீர் பொழிய கைகள் நடுநடுங்க
இலக்கியம் தடுமாற இலக்கணம் தமிழ்மாற
எப்படி றமணா! உனக்கு கவிதை எழுத
சத்தியமாய் முடியவில்லை இப்படியொரு நிலை
எமக்கு வரும் என்று கனவிலும் கண்டதில்லை...

நித்திலம் கொழிக்கும் இலங்கைத்தீவின்
செழிப்பான நகரமாம் யாழ்ப்பாணத்தின்
எழில் கொஞ்சும் ஈச்சமோட்டையிலே
காவல் தெய்வமாம் வைரவரின் சந்நிதி அருகினிலே
அவதரித்த அவதார புருஷனடா நீ றமணா!

அன்னைக்கு நீ மூத்த பிள்ளை - ஆனால்
எல்லோருக்கும் நீ செல்லப்பிள்ளை
உன்னை விரும்பாதோர் எவரும் இல்லை
உன்னை வெறுப்பவர் என்று இந்த உலகில்
யாரும் இல்லையடா றமணா!

பக்கத்து வீட்டுக்கே சொல்லாமல் போகாத நீ
நிச்சயமாய் எங்களுக்கு சொல்லாமல் தூர தேசம்
போக வாய்ப்பில்லை உண்மையை சொல்லடா றமணா!
எங்குதான் போனாயடா நீ - தேடி தேடியே
ஆண்டொன்று ஆனதுடா!

உன் செல்ல சிரிப்பும். பண்பான குணமும்
இன்றுவரை யாராலும் நிரப்பவே முடியாத வெற்றிடமாய்
இருக்குதடா - காரணம் தெரியுமா றமணா! உன்கள்ளம்
இல்லாத அந்த உள்ளம் இங்கு யாருக்கும் இல்லையடா
சத்தியமாய் சொல்கிறேன் உனக்கு நிகர் இவ் உலகில்
நீ மட்டும் தானடா றமணா!

றமணா! உன்னை கடிதங்கள் கூட
தேடுதடா - அந்த அஞ்சல் திணைக்களத்தின்
அஞ்சாத நெஞ்சமடா நீ.....
வேலையில் நீ காட்டும் அர்ப்பணிப்புக்கும்
எம் மீது நீ கொண்ட அளவற்ற அன்புக்கும்
எப்போதும் நாம் உந்தன் அடிமையடா றமணா!
அன்று உன் அதீத திறமை கண்டு வியந்தோம்
இன்று உனையே காண முடியாமல் தவிக்கின்றோம்.

ஈச்சமோட்டை மண்ணும் நீ நடந்த இடங்களும்
நீ விளையாடிய மைதானமும் நீ பணிபுரிந்த இடங்களும்
மீண்டும் ஒருமுறை உன் கால் தடம் பதிய வேண்டி
ஏங்கி நிற்கின்றது - எங்களுக்கு தெரியுமடா றமணா!
கடவுளுக்கும் உன்னை அவ்வளவு பிடிக்கும் என்று
அதனால் தான் என்னவோ அவர் உன்னை
அழைத்துக்கொண்டார் - நிச்சயம் ஒரு நாள்
உன்னை எங்களிடம் அனுப்பிவைப்பார் என்ற
நம்பிக்கையில் காத்திருக்கின்றோம் - வாடா றமணா!
ஒரு முறை வாடா றமணா!

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**
**உறவினர்கள், நண்பர்கள்.**

**ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.**

**077 1600 412**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

# பொது அறிவித்தல் - 2024

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**01. ஆதன வரி செலுத்துதல்**

2024ம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்) பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கவும்.

மேலும் ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

**02. ஆதனப் பெயர்மாற்றம் செய்தல்**

சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு. ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

**03. காணி உப பிரிவிடுதல் / ஒருங்கிணைத்தல்**

பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போதும் ஆதனங்களை ஒன்றாக்கும் போதும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை / ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளவும்.

**04. கட்டட அனுமதி வழங்கல்**

1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.
2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.
3) அனுமதி பெற்று கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக சபை உப அலுவலகத்திற்கு ஊடாக விண்ணப்பித்து குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

**05. வீதி ஒழுங்கைப்பேணல்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்பரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**06. வியாபார அனுமதி / வியாபார வரி - 2024**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், முச்சக்கர வண்டித்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் தொழிற்சாலைகள் மற்றும் சேவை வழங்குனர்கள் 2024ம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான / வியாபார வரி செலுத்துவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2024ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2024 ஆம் திகதிக்குள் செலுத்தி 2024ம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை / வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**07. இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை**

எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

**08. துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக வரி**

2024ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களுக்கான வரியை மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

**09. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27 ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் கிளையில் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**10. படவரைஞர்களைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல்**

2024ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு / புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்களும், புதிதாக பதிவு செய்பவர்களும் படவரைஞருக்கான குறைந்த பட்சம் NVQ Level 5 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபிற்கான - Drafting Technology (Building) சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். பதிவுகளை புதுப்பிக்காத படவரைஞர்களால் வரையப்படும் வரைபடங்கள் 2024.01.01 இற்கு பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப்பதிவிற்கான விண்ணப்பப்படிவங்களை எமது சபை உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபை உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ள முடியும்.

**11. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2024ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2024ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**12. திண்மக் கழிவுகளை அகற்றுதல்**

வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது நாளாந்த சமையல் கழிவுகளை உரிய வகையில் தரம் பிரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கழிவகற்றல் நேர அட்டவணைக்கு அமைவாக வழங்கி சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். மேலதிகமான கழிவுப் பொருட்களைத் தரம் பிரித்து, பிரதேச சபை தலைமை அலுவலகம் உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்தி அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**13. நீர்வழங்கல் சேவை**

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உரிய கட்டணத்தை செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**14. கனரக வாகன சேவை**

திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

வீதி உருளை, பக்கோ லோடர், டிப்பர் என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

**15. கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்**

பொதுமக்கள் மற்றும், அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**16. பொதுப்பயன்பாட்டு சேவைகள்**

சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடைய முடியும்.

**17. மயானங்கள்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சபைக்குரிய சுடுகாடுகளில் / இடுகாடுகளில் பூதவுடலினை தகனம் / நல்லடக்கம் செய்வதற்காக உரிய கட்டணத்தினை எமது உப அலுவலங்களில் செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளவும்.

❖ **இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.**

**சீ.சபேசன்.**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்**
**2023.12.12**

**தொலைபேசி இலக்கங்கள் :**
**தலைமை அலுவலகம் - 021 225 6647**
**மானிப்பாய் பட்டினம் - 021 225 5382**
**மானிப்பாய் கிராமம் - 021 225 5379**
**பண்டத்தரிப்பு பட்டினம் - 021 225 2021**
**பண்டத்தரிப்பு கிராமம் - 021 225 2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உதவியாளர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் மூக்குக்கண்ணாடி ஸ்தாபனத்திற்கு பெண் உதவியாட்கள் தேவை. வேலை பழக விரும்புவோர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **021 222 7893**
**077 576 6595**



# பல்கலை மாணவன் கஞ்சாவுடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)


# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 09 . 1929



மறைவு
11 . 12 . 2023

## இத்தினி தம்பிராசா (ரெயிலர்)

நல்லூர் முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இத்தினி தம்பிராசா (ரெயிலர்) நேற்று (11.12.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இத்தினி சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சடையர் ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் ரஞ்சினி, சிறீகாந்தன், பாலசூரியர், ஆனந்தசூரியர், வசந்தினி, சுகந்தினி, ராஜ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அருளப்பு, அருந்தவமலர் மற்றும் சத்தியபாமா, ஜெயசிறி, மனோரஞ்சிதம், அமிர்தலிங்கம், இலங்கராசா, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், வதனபிரசாந், ரெஜினா, ஜெனிஸ், நிரோஜன், அனுஜன், நிரோஜா, ஜீவிதா, பிரதீபன், சிவரஞ்சன், நிவேதா, சாருஜன், பிரசாந்த், அனுசா, தமயந்தி, பிரியந்தி, துஷ்யந்தி, மதுசன், விஜிதா, வினுசன், டிலக்சன், வசீகரன், அகிர்தன், சுஜீவன், திவ்யா, திலக்சனா, விதுசனா, கம்சிகா, றிக்மன்ராஜ், விஜிதா, நிலுஜா, சலோமி, பேட்டன், ஜெனுசா, கொன்சலா, அஜந்தன், கௌசிகா, துஜந்தன், கலிஸ், விதுசன் ஆகியோரின் பேரனும், சரணியா, அபிநயா, சாமினி, சர்வின், சஞ்சு, கர்சன், அன்றியா, எரோணியா, ஸ்ரெபோறா, செர்லினா, சிமிர்னா, எமி, எவிலின், கேசிகன் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவு, சண்முகவடிவு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகமணி ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் செல்வஞானம், நவஞானம், ரவீந்திரன், ராஜேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சுகிர்தா, சிறீதர், வனஜா, ரஜீவன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இராமலிங்கம் வீதி, நல்லூரில் அமைந்து உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**449/3, இராமலிங்கம் வீதி,**
**நல்லூர்**
**077 569 0423**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

cs.44723) (2.6)



# ST. JOHN'S COLLEGE, JAFFNA

We are looking for professionally qualified, committed and motivated candidates to fill the following vacancies.

## ACCOUNTANT

**Requirements:**

**Qualifications:**

- Should possess a full / part qualification from a recognized Accounting body (Degree / CIMA / ACCA/ICA).
- Hands-on experience with QuickBooks accounting software,
- Knowledge in the preparation of financial statements, Auditing procedures, VAT returns and monthly financial reports and project cost reports is must,
- Strong attention to detail and good analytical skills,
- Good command of English,
- Age between 30-55 years.

**Role:**

- Head of Accounts Department,
- Advises and provides assistance to principal on all finance, audit and compliance issues.
- Responsible for Monthly Reporting of Cash Management and the financial statements & its accuracy and completion before deadlines,
- Prepares annual budgets in liaison with other functional heads and principal,
- Expected to carryout Feasibility Studies on various projects and tenders as and when required and advise principal.

## HUMAN RESOURCE MANAGER

**Requirements:**

**Qualifications:**

- The ideal candidate should hold a Bachelor's Degree in Human Resources Management or Business Management and / or have a professional qualification in HRM from a reputed educational institute.
- The individual should have atleast 2 years' experience in HR and Administration

**Role:**

The person shall be responsible for

- Implementing HR policies,
- General administration functions at the location while executing HR strategies in the areas of employee engagement, employee welfare, talent attraction and HR analytics.

The Successful candidate would be provided with a competitive remuneration package on par with the qualification and experience.

Please forward your CV with the details of two non-related referees on or before 22nd December 2023 to stjohns@sltnet.lk mentioning the post applied for on the subject line or send it by registered post to the below given address indicating the post applied for on the top left hand corner of the envelope.

**Only shortlisted candidates would be called for an interview**

Principal,
St. John's College,
Main Street, Jaffna.



# முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



முப்பது ஆண்டுகள் கடந்து விட்டதே எங்கள்
அப்பா, அம்மா உங்களைப் பிரிந்து.....
எப்போதும் நாம் உங்கள் நினைவுடனேயே
காளி அம்பிகையின் மலர்ப்பாதத்தில்
-நிலைத்திருந்து
எம்மை ஆசிர்வதிக்க வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்*

**காளி கோவிலடி,**
**மல்லாகம்**



அமரர்
**தம்பிப்பிள்ளை கிட்டினர்**
தோற்றம் 20.02.1937 மறைவு 25.10.1993

அமரர் கிட்டினர்
**புவனரத்தினேஸ்வரி**
தோற்றம் 16.07.1947 மறைவு 02.12.1994


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர் நினைவேந்தல்

# பல்கலை மாணவரிடம் ரி.ஐ.டியினர் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் உபதலைவரான இராசரத்தினம் தர்ஷனிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து சுமார் 3 மணித்தியாலத்துக்கும் மேலாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்தபொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் பாடல் இசைக்கப்பட்டமை மற்றும் மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. (அ-ம-27)

# கரையொதுங்கிய படகால் குடத்தனையில் பரபரப்பு!

## தமிழகத்தைச் சேர்ந்தது



யாழ்ப்பாணம், டிசெ. 12

வடமராட்சி கிழக்கு, குடத்தனை கடற்கரையில் தமிழகப் படகொன்று கரையொதுங்கியுள்ளது. குடத்தனை பொற்பதி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் காணப்பட்ட அந்தப் படகு தமிழக மீனவர்கள் பயன்படுத்தும் நாட்டுப்படகு என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக அந்தப் படகு கடலில் அடித்துவரப்பட்டு கரையொதுங்கியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (அ-ம-100)

## வட்டுக்கோட்டையில் குருதிக் கொடை



யாழ்ப்பாணம், டிசெ. 12

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் குருதிக்கொடை முகாமில் கலந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2024

1. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை சுகாதார அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** : 2023.12.12 - 2023.12.27 நண்பகல் 12.00 மணிவரை
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 2023.12.27 பி.ப 14.00 மணி வரை
**கேள்வி திறக்கும் திகதி** : 2023.12.27 பி.ப 14.05 மணி

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. எம்மால் குறிப்பிடப்பட்ட கேள்வித்தொகையிலும் கூடிய கேள்வித்தொகையினை கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
5. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை **வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**
6. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும். மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
7. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக ரூபா 50,000/= ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி இணைப்பிரதி ஆகியவற்றை தனித்தனி தபால் உறைகளில் இட்டு. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி. **இணைப்பிரதி** எனக் குறிப்பிட்டு இரு கடித உறைகளையும் ஒரு கடித உறையினுள் இட்டு அக் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு **தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேசசபை.** புத்தூர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.) அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய திகதியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
9. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
10. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவடைந்ததனை தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்..
11. இக்கேள்வி கோரல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு **இறுதியானதாகும்.**
12. மேலதிக நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் கேள்விப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதுடன் மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் நேரடியாகவோ 021 222 8867 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சுத்திகரிப்பு சேவை மேற்கொள்ள வேண்டிய இடங்கள் | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த ஆளணி | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கட்டாய நேரம் | ஆகக்கூடிய கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | அச்சுவேலி பொதுச்சந்தையும் அச்சுவேலி பேருந்து நிலையமும் | 02 | காலை 6.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை | 2,225,750.00 |
| 2 | புத்தூர் பொதுச் சந்தை | 01 | காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை | |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர்.**
**2023.12.12**

(cr.41190) (N-1)



## பெயர்மாற்றம்

வேலாயுதம் வீதி. நுணாவில் மத்தி சாவகச்சேரியில் வசிக்கும் **முத்துக்குமாரசுவாமிஐயர் உமாபதிசதாசிவம்** ஆகிய நான் எனது பெயரை **முத்துக்குமாரசுவாமிஐயர் உமாபதிசிவம்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **உமாபதிசிவம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

CS 53159 (AK.1) **மு. உமாபதிசிவம்**



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 03 . 1983
மறைவு 12 . 12 . 2019

**அமரர் இராமதாஸ் சசிகரன்**

ஆண்டுகள் நான்கு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும்
உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
(cs.53032) (N.1)
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.11.1946
மறைவு 04.12.2021

**சோமநாதன் பாலசுப்பிரமணியம் (பாலா)**

திதி : 12.12.2023

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப்பிரகாசித்தீர்!
இன்று வேண்டித்துதித்தே இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01.09.1956 — மறைவு 13.11.2023

## சூசைப்பிள்ளை ஜோன் அரியதாஸ்

13.11.2023 அன்று இறைபாதம் அடைந்த எமது அன்புச் சகோதரனின் 31 ஆவது நினைவு நாள் நாளை (13.12.2023) புதன் கிழமை நடைபெறவுள்ளது அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருபலியிலும் அதனை தொடர்ந்து அவர் வீட்டில் நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
வாழைக்குலை சந்தைக்கு அருகில்
சுன்னாகம்.


அருட்பணி அல்றின்
076 643 1080


# யாழ்ப்பாணத்தில் முட்டை விலை சடுதி உயர்வு!

யாழ். மாவட்டத்தில் முட்டையின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. நத்தார் பண்டிகை மற்றும் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் 45 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு முட்டை தற்போது 60 ரூபா முதல் 65 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. முட்டை விலையின் சடுதியான அதிகரிப்பினால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-66)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர்

**நமசிவாயம் சிவபாலன்**

அவர்கள் நேற்று (11.12.2023) சாவகச்சேரி மாவட்ட நீதிபதி

**ஏ.ஜூட்சன்**

முன்னிலையில் இலங்கைத் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு மனமுவந்து பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் அர்ப்பணிப்பான சேவையினை மக்களுக்கு வழங்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கு.சிவகுமார் குடும்பம் - கல்வயல்
கீர்த்திநாதன் அச்சுதன் - சாவகச்சேரி



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

# Vacancy Advertisement for Finance Officer

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

We are looking to recruit Finance Officer. Provide support to ensure the finance

**Finance Officer's Responsibilities are.**

- Accurate and timely recording of financial transactions in HALO's online accounting system
- Ensuring proper and timely archiving of financial records, including digital and physical archives
- In charge of petty cash payments, and support cheque payments including on-line payments of assigned project/s.
- One of the key users in NetSuite for data entry for all payments and reconciliation.
- Ensuring proper maintenance of the record keeping and filing system of the projects including scanning financial documents
- Review and support Jaffna /Killi petty cash book
- Supporting to online payment preparing the monthly cash request
- Assist for preparing salaries for all staff.
- Assisting with internal and external audits
- Dealing with staff enquiries regarding finance and salaries
- Any other duties as required by the Finance Manager
- Checking all payment documents
- Preparing accounts supporting document for filing and scanning
- Supporting procurement activities & Paper works

**QUALIFICATIONS AND COMPETENIES:**

- Minimum qualification of undergraduate degree in Finance and Business Administration; or the equivalent,
- Minimum of 1-3 years of finance work experience.
- Knowledge and/or experience working in the development sector / donor funded projects would be an asset.
- Experience using computerized financial accounting systems, especially online-based ERP systems.
- Extensive knowledge of Microsoft Office, particularly Excel, as well as the ability to learn other software tools readily and implement/use them successfully.

All applications must be submitted to the below address no later than Friday 22 December 2023 either by Post or via email below. "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

# Vacancy Advertisement for Senior Finance Officer

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

We are looking to recruit Senior Finance Officer. Provide support to ensure the finance Process is delivered on time and to a high standard.

**Senior Finance Officer's Responsibilities are.**

- Accurate and timely recording of financial transactions in HALO's online accounting system.
- Preparing, processing, and recording payroll, including relevant statutory deductions.
- Pass relevant Journal entries in the Accounting System to ensure completeness of monthly accounts including Monthly Bank Reconciliations
- Reconciling bank and cash accounts in accordance with agreed schedule and deadlines
- Ensuring proper and timely archiving of financial records, including digital and physical archives.
- In charge of petty cash payments, and support cheque payments including on-line payments of assigned project/s;
- Monitor balances of petty cash account for the Jaffna/Killinochchi office in a timely and efficient manner always ensuring the availability of adequate petty cash balance in hand.
- Monitor bank balance of assigned project/s and request for funds on time to ensure adequate funds are always available.
- Coordinate fund requests to the Finance Manager every month based on planned activities for the quarter.
- Ensure compliance of financial policies to meet donor requirements.
- Support Finance manager in partner training on finance procedures, guidelines, and compliance matters
- Working with Procurement officer to ensure the financial follow up are against the compliance.
- Providing information and documents in support of internal and external audit
- One of- the key user in NetSuite for all payment and reconciliation
- Support finance manager to prepare the monthly cash request and insurance list on location level.
- Support to preparing salaries for all national staff.
- Dealing with staff enquiries regarding finance and salaries
- Any other duties as required by the Finance Manager or expat management.

**QUALIFICATIONS AND COMPETENIES:**

- Minimum qualification of undergraduate degree in Finance and Business Administration; or the equivalent,
- Minimum of 3-5 years of finance work experience.
- Knowledge and/or experience working in the development sector / donor funded projects would be an asset.
- Experience using computerized financial accounting systems, especially online-based ERP systems.
- Extensive knowledge of Microsoft Office, particularly Excel, as well as the ability to learn other software tools readily and implement/use them successfully.

All applications must be submitted to the below address no later than Friday 22 December 2023 either by Post or via email below. "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசூரினாக் கடற்கரையில் துப்புரவும் மரநடுகையும்!

'கசூரினா சுற்றுலா கடற்கரையில் நிலைபேண்தகு எதிர்காலத்தை நோக்கி' எனும் எண்ணக்கருவுக்கு அமைய துப்புரவுப் பணியும், மரநடுகைச் செயற்றிட்டமும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. கொமர்ஷல் வங்கியின் கிளை நிறுவனங்களும், நீர்வேலி கிறீன் லேயர் அமைப்பும், காரைநகர் பிரதேசசபையும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தன. (ம-66)





## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப்பொதிகள் வழங்கிவைப்பு





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும், 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின்கீழ் கொட்டடி, இருபாலை ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு அண்மையில் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ம-27)

## வவு. மகாறம்பைக்குளம் வெள்ளத்தில் தத்தளிப்பு



வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் பல வீடுகளுக்குள் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள காந்திவீதி உள்ளிட்ட பல வீதிகள் அண்மையில் புனரமைக்கப்பட்டன. இந்த வீதிப் புனரமைப்பின்போது சரியான திட்டமிடல் பின்பற்றப்படாமையே இவ்வாறு வெள்ள நீர் தேங்கியமைக்குக் காரணம் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால், வீடுகளுக்குள் வெள்ளநீர் நீண்டகாலமாக தேங்கி நிற்கின்றது என்றும், டெங்கு உள்ளிட்ட பெருந்தொற்றுக்களுக்கான அபாயமும் ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-ம-110)

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம்
நல்லின தென்னம் நாற்றுக்களும்,
குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 659 2044**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 11 - 1951



மறைவு 11 - 12 - 2023

### குமாரசாமி சத்சனாமூர்த்தி

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கட்டுவன், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சத்சனாமூர்த்தி அவர்கள் நேற்று (11.12.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி ஆச்சிமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வனும், சந்திரமலர், சந்திரகுமாரி ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம், சந்திரசேகரம், யசோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வெங்கடேசன் (மின் பொறியியலாளர், டுபாய்), சர்வாஜினி (ஆசிரியர், யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ஜெகசோதி (பிரதேச சபை, வலிகாமம் மேற்கு -சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலேஸ்வரன், சுதர்சினி, சுரேஸ்குமார் (கட்டிட ஒப்பந்த மேற்பார்வையாளர்) ஆகியோரின் மாமனாரும், ஆர்த்திகன், ஹம்சாயினி, ஆரவி, காவியா, சைந்தவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27354) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 01 - 1969



மறைவு 09 - 12 - 2023

### வேலுப்பிள்ளை புஸ்பராசா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை புஸ்பராசா அவர்கள் கடந்த (09.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான வேலுப்பிள்ளை, மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான சின்னையா - தையல்நாயகி தம்பதிகளின் மருமகனும், சிவநந்தினியின் அன்புக் கணவரும், ரதீபா, பவிசன், சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிர்காமராசா, கனகராசா, ஸ்ரீஸ்கந்தராசா, தயாநிதி, ராகினி, றஜனி, குகராசா (வாசன்), டர்மராஜா, காலஞ் சென்ற கஜனி மற்றும் ராஜ்பவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜலதா, சுமனா, ராஜகலா, சுரேந்திரன், பிரபாகரன், ஸ்ரீசண்முகராசா, குகாஜினி, சிவதர்மினி, சிவச்செல்வன், சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பளை
077 765 68 73, 076 726 5434

தகவல்:
குடும்பத்தினர்

(CR 41185)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகளை சாகடிப்போம்

## இஸ்ரேலின் தாக்குதலையடுத்து ஹமாஸ் மிரட்டல்

டெல்அவிவ், டிசெ. 12

தெற்கு காசாவின் முக்கியமான நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கும் நிலையில், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாதவரை எந்தவொரு பணயக்கைதிகளும் உயிருடன் வெளியேறமாட்டார்கள் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல்மீது கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர்த் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 80 இஸ்ரேல் பிணைக் கைதிகளுக்கு இணையாக 240 பலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், தெற்கு காசாவின் முக்கியமான நகரத்தை இஸ்ரேல் குண்டு வீசித் தாக்கியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூரத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஹமாஸிடம் இன்னும் பலர் பிணைக்கைதிகளாக உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே, 'எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பிணைக் கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள்' என ஹமாஸின் ஆயுதப்பிரிவின் செய்தி தொடர்பாளர் அபு ஒபையா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர், 'இஸ்ரேலிய படையுடன் தொடர்ந்து போர் நடத்துவோம். ஒவ்வொரு தெருவிலும், பகுதியிலும், காட்டுமிராண்டித்தன ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சண்டை போடுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பிணைக்கைதிகளும் உயிருடன் வெளியேறமாட்டார்கள். அதோடு, எதிரிகள் எங்களுடைய எதிர்க்கும் தன்மையை உடைப்பதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் நாங்கள் எங்கள் மண்ணில் புனிதமான முறையில் போராடுகிறோம்' - என்றார். (ம)



# காஸாவில் போர்நிறுத்தம் நிராகரித்தது அமெரிக்கா!

காஸாவில் உடனடியாகப் போர் நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும் என்று, இலங்கை உள்ளிட்ட 97 நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தால் நிராகரித்துள்ளது.

காஸாவில் போர் நிறுத்தம் தொடர்பில் இஸ்ரேல் பரிசீலிக்க வேண்டும் என்று கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்திருந்த நிலையில், அவரின் கருத்துக்கு முற்றிலும் முரணானதாக ஐ.நா.வில் நடந்துகொண்டுள்ளது அமெரிக்கா. (ம-6)

# விமான ஊழியர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

விமான ஓடுபாதை வழிகாட்டல், பராமரிப்பு பணியாளர்களுக்கு ஜப்பான் விமான நிலையங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாகவும் ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. தாதியத்தொழில், உணவு மற்றும் விவசாயம் ஆகிய துறை சார்ந்த தொழிலாளர்கள் ஏற்கனவே ஜப்பானில் தொழில் புரிவதற்காக அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கையில் புதிதாக விமான ஊழியர்களும் ஜப்பானுக்குச் செல்லவுள்ளனர். (ம-6)

### பட்ஜெட்...

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது. 2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அணி, விமல் அணி என்பன எதிராக வாக்களித்தன.

நவம்பர் 22ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் நடைபெற்றது. இந்நிலையில் நாளை 13ஆம் திகதி புதன்கிழமை பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (அ-ம-44)

### அரசமைப்புப்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புப் பேரவையின் சட்டம், நடவடிக்கை மற்றும் ஏற்பாடுகளை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசமைப்புப் பேரவைக்கே இருக்கின்றது. ஜனாதிபதிக்கோ, அமைச்சருக்கோ அல்லது ஏனைய வெளித் தரப்புகளுக்கோ இதற்கான அதிகாரம் இல்லை.

அரசமைப்புப் பேரவைக்கான இறுதி உறுப்பினர் நியமனம் தொடர்பில் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை நியமிப்பதற்கு நாமும் உடன்பட்டுள்ளோம். அரசமைப்புப் பேரவையின் ஏனைய தரப்புகளும் இணங்கியுள்ளன. எனவே, அந்த நியமனம் நடைமுறைக்கு வரவேண்டும். அரசமைப்புப் பேரவை என்பது அரசமைப்பு ரீதியில் அதிகாரம் உள்ள சுயாதீன அமைப்பாகும்' - என்றார். (அ-ம-44)

### வேறுதேர்தல்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது. அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளப் பார்க்கின்றார். ஆனால், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அரசமைப்பின் பிரகாரம் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அதை நடத்தினால்தான் அவர் ஏனைய தேர்தல்களைப் பற்றி சிந்திக்கமுடியும்.

ஆனால், அவர் தேர்தலை நடத்தப் பயப்படும் நிலைமை காணப்படுகிறது. தேர்தல் என்றாலே விசர்நாய் தண்ணீரைக் கண்டதுபோல் பயப்படுகின்றார். ஆகவே அவர் தேர்தலை நடத்தவேமாட்டார். எதிர்வரும் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தேர்தல் ஒன்றினை நடத்தியாகவேண்டும். அதன்பின் யார் ஜனாதிபதியாக வருகின்றார்களோ அவர் தேர்தலைப் பற்றி யோசிப்பார். ஆகவே இலங்கையில் தற்போதைக்கு வேறு தேர்தல்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. ஏதேனும் அதிசயங்கள் அல்லது அழுத்தங்கள் இடம்பெற்றால் மாத்திரமே தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது-என்றார். (அ-ம-110)

### பெண்ணைத்...

மதியம் நடந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

அச்சுவேலி - நாவற்காடு வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு அருகில் தனிமையில் சென்று கொண்டிருந்த பெண்ணின் நகைகளை மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் பறிக்க முயன்றுள்ளார். அவ்வேளையில் மழைக்கவச அங்கி மூலம் உடலை முற்றாக மூடி ஓட்டோவில் வந்த மர்ம நபரொருவர் பெண்ணைத் தாக்கியதுடன் இருவரும் இணைந்து குறித்த பெண் அணிந்திருந்த நகைகளை அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

ஒரு பவுண் காப்பு, அரைப் பவுண் மோதிரம் என்பனவே இவ்வாறு கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66)

### வற்...

டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் ஆதரவாக 100 வாக்குகளும், எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் 45 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், நிதிச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு மற்றும் மூன்றாவது மதிப்பீடு என்பன இடம்பெற்று, திருத்தங்கள் இன்றி நிறைவேற்றப்பட்டதுடன், குறைநிரப்புத் தொகை செலவினத் தலைப்பும் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தார். சுதந்திரக்கட்சி எதிராக வாக்களித்தது. நாமல் ராஜபக்ச வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. எதிர்வரும் ஜனவரி முதல் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வற்வரி 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்படும். (அ-ம-44)

### விபத்தில்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. ஏனைய இருவரில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மற்றையவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தகாடு முகாமிலிருந்து 50 கைதிகள் தப்பியோட்டம்



கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து 50 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர்களைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற 50 கைதிகளில் 21 கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

# கிரிக்கெட் அணிக்கு புதிய தெரிவுக்குழு



கொழும்பு, டிசெ. 12

இலங்கை கிரிக்கெட் அணிக்கு 5 பேர் கொண்ட புதிய தெரிவுக்குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நியமித்துள்ளார். இலங்கை அணியின் முன்னாள் தலைவர் உபுல் தரங்க இந்தத் தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் வீரர்களான தில்ருவான் பெரேரா, தரங்க பரணவிதான, அஜந்த மெண்டிஸ் மற்றும் இந்திக டி சேரம் ஆகியோர் இதன் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

# திலினி விடுதலை

கொழும்பு, டிசெ. 12

பணம் இல்லாத கணக்கில் இருந்து பெறுமதியான காசோலைகளை வழங்கி 80 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை மோசடி செய்த வழக்கில் திலினி பிரியமாலியை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, அரச தரப்பு சட்டத்தரணி மற்றும் பிரதிவாதிகள் ஆகியோரின் வாதங்களைப் பரிசீலித்த நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ம)


## காணவில்லை



9ம் வட்டாரம் புங்குடுதீவு வல்லன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **சோதிநாதன் யோகலட்சுமி (யோகம்)** என்பவரை கடந்த 45 நாட்களாக காணவில்லை இவரைக் கண்டவர்கள் / விபரம் அறிந்தவர்கள் கீழுள்ள இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 208 ஜெந்திநகர், கிளிநொச்சி.
077 532 4349, 077 533 5879

ஹொட்டல் ஒன்றிற்கு வேலையாள் தேவை

றொட்டி பாஸ்,
வெயிட்டர், உதவியாளர்
தேவை

தொடர்பு: 077 983 5705

## தேவை

திருநெல்வேலியில் இயங்கும் சில்லறைக் கடைக்கு காசாளர் தேவை.
வயது: 45-60
076 698 5728

## சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை. யாழ்நகரிற்கு அண்மையில் உள்ளோர் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 755 5456, 077 314 7580

## விசாக்கான Show money

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
visit visa
student visit visa
fixed & saving
All travel documents
மிகக் குறைந்த கட்டணத்தில்!
தொடர்பு:
075 033 6759

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 24 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல். குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
076 755 8606

(CS 27307 A-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09.03.1951
விண்ணில் 23.11.2022

**அமரர் கந்தையா தர்மலிங்கம்**
(உரிமையாளர், நியூ குறிஞ்சி பார்மசி, திருநெல்வேலி.)

திதி: கார்த்திகை அமாவாசை

நீங்காத நினைவுகளுடன்...
மனைவி
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org